# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2288/15 - 2022 ජූලි මස 12 වැනි අඟහරුවාදා - 2022.07.12

*2288/15 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 4 /2012*

**(54 ஆம் அத்தியாயமான) சிறைச்சாலைகள் கட்டளைச்சட்டம்**

(54 ஆம் அத்தியாயமான) சிறைச்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 94 இன்கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்படும் விதிகள்.

**கலாநிதி விஜயதாச ராஜபக்ச,**
நீதி, சிறைச்சாலை அலுவல்கள்
மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு
அமைச்சர்.

கொழும்பு,
2022, யூலை 07.


1A -G 37066 — 56 (2022/07)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**விதிகள்**

*1920, மாச்சு 19 ஆம் திகதிய 7093 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சிறைச்சாலைகள் விதிகள் இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றன:-*

*(1) "மருத்துவ அலுவலர் தொடர்பிலான விதிகள்" எனும் தலைப்பின்கீழ் அதன் 80 ஆம் விதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-*

*"80. (1) தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்ட கைதியொருவர் குணமடையும் சாத்தியமற்ற பாரதூரமான நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாக மருத்துவ அலுவலரொருவர் அல்லது மருத்துவ தொழிலர் ஒருவர் கண்டறியப்பட்டுள்ளவிடத்து சுகாதாரம் எனும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சரினால் நியமிக்கப்பட்ட மருத்துவ சபையொன்றினால் விதந்துரைக்கப்பட்டதன் பின்னர், அத்தகைய மருத்துவ அலுவலரின் அல்லது மருத்துவ தொழிலரின் எழுத்துமூலமான சான்றின் அடிப்படையின்மீது, அத்தகைய சிறைக்கைதியை சீர்திருத்த மேற்பார்வையின்கீழ் அல்லது தன்னம்பிக்கை விடுவிப்பின்மீது கொண்டுவருவது கவனத்திற்கெடுக்கப்படலாம்";*

*(2) மருத்துவ அலுவலர் அல்லது மருத்துவ தொழிலர் பின்வருமாறு அபிப்பிராயப்படுமிடத்து:-*

*(அ) கைதியின் உயிருக்கு தொடர்ந்தும் மறியற்றண்டனைக்கு உட்படுத்தல் ஆபத்தானது மற்றும் சத்திரசிகிச்சை அல்லது வேறு பரிகரிப்புக்கு பொது வைத்தியசாலைக்கு தற்காலிகமாக அழைத்து செல்வதன்மூலம் கைதியினுடைய நிலைமையினை சீராக்கமுடியாதென; அல்லது*

*(ஆ) குறுகிய காலப்பகுதியினுள்ளும் தண்டனைத்தீர்ப்பு முடிவடைய முன்னர் கைதியானவர் இறப்புடன் முடிவுறக்கூடிய சாத்தியமுள்ள கொடிய நோயுடைய கைதி என கண்டறியப்பட்டுள்ளாரெனவும் கைதியை அகற்றுவதற்கு இன்னும் வாய்ப்புள்ளவராக இருக்கின்றாரெனவும் கைதி விடுதலைபெறும் பட்சத்தில், அவரைக் கவனிப்பதற்கு இயலுமாகவும் விருப்பங்கொண்டுள்ளவராகவுள்ள நண்பர்கள் அல்லது உறவினர்கள் உள்ளனர் என கருதுவதற்கு காரணமுள்ளதெனவும்; அல்லது*

*(இ) கைதியின் உள நிலையானது மேலதிக மறியற்றண்டனையினால் எதிரிடையாக பாதிக்கப்படும் அல்லது ஆபத்துக்குட்பட்டதெனவும்,*

*மருத்துவ அலுவலர் அல்லது மருத்துவ தொழிலர் சிறைச்சாலை படிவம் 26 இல் அத்தகைய கைதியின் விபரங்களுடன் சேர்த்து பூரணமான மருத்துவ அறிக்கையென்றை சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு உடனடியாக சமர்ப்பித்தல் வேண்டும்.*

*(3) சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதி (2) ஆம் பந்தியின்கீழ் அத்தகைய அறிக்கையை பெற்றுக்கொண்டதன்மீது, கைதியை பரிசோதிப்பதற்கும் சிறைச்சாலைப் படிவம் 30 இல் அத்தகைய சிறைக் கைதி பற்றி அறிக்கையிடுவதற்கும் மருத்துவ சபையொன்றை நியமித்தல் வேண்டுமென்பதுடன் அதன்கண் அவருடைய சொந்த பரிந்துரைகளுடன் அரசியலமைப்பின் ஏற்பாடுகளின்கீழ் பொது மன்னிப்பு அளிப்பதற்கு கவனத்துட்கொள்வதற்காக சனாதிபதிக்கு சமர்ப்பிப்பதற்காக சுகாதாரம் எனும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினூடாக நீதி என்றும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சருக்கு "அவசரம்" என அடையாளமிட்டு அத்தகைய கைதிக்கு இயைபான அனைத்து பத்திரங்களையும் சேர்த்து அத்தகைய அறிக்கையை அனுப்புதலும் வேண்டும் :*

*(2) சிறைக்கைதிகளை அனுமதித்தல் மற்றும் விடுவித்தல் தொடர்பிலான விதிகள் எனும் தலைப்பின்கீழ்:-*

*(அ) விதி 165 இனை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக பின்வருவதனை இடுவதன்மூலம்:-*

"*165. (1) பெண் சிறைக்கைதியொருவரின் பிள்ளையொருவர் ஐந்து வயதுக்கு குறைந்தவராயின் மற்றும் பாடசாலை செல்லவில்லையாயின், தாயுடன் சிறைச்சாலைக்குள் பொறுப்பேற்கப்படலாம். தாயுடன் அத்தகைய பிள்ளை சிறைச்சாலைக்கு பொறுப்பேற்கப்படும்போது, சிறைச்சாலை பொறுப்பதிகாரி பிள்ளை பொறுப்பேற்கப்பட்டது என ஆணைப்பத்திரத்தின் பின்புறத்தில் உறுதிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன் அத்தியட்சகரின் கையொப்பத்தினை புறக்குறிப்பிடுவதற்காக பெற்றுக்கொள்ளுதலும் வேண்டும்.*

*(2) பிள்ளையொருவர் சிறைச்சாலைக்குள் பொறுப்பேற்றுக்கொள்ளப்படும் போது, சிறைச்சாலை பொறுப்பதிகாரி ஒரு தடவை அத்தகைய நிகழ்வை சிறைச்சாலை அத்தியட்சகருக்கும் மருத்துவ அலுவலருக்கும் அறிக்கையிடுதல் வேண்டும். மருத்துவ அலுவலர் பிள்ளையின் அனுமதியின் இருபத்திநான்கு மணித்தியாலத்தினுள் பிள்ளையை பரிசோதனை செய்து அத்தியட்சகருக்கு மருத்துவ அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.*

*(3) அத்தியட்சகர் பிள்ளையின் அனுமதிபற்றிய நிகழ்வை சிறுவர் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்துக்கு அறிவித்தல் வேண்டும். பிள்ளை தாயுடன் வசிப்பது பிள்வையின் மிகச்சிறந்த நலனா என்பதனை சிறைச்சாலை அத்தியட்சகருடனும் மருத்துவ அலுவலருடனும் நடைமுறைமுறையில் சாத்தியமானவாறு கூடியவிரைவில் கலந்துரையாடுதல் வேண்டும்.*

*(4) சிறைச்சாலை வளாத்தினுள் பிள்ளை தொடர்ந்து வதிதலானது அத்தகைய மதிப்பீட்டின்மீது தங்கியுள்ளது.*

*(5) மதிப்பீட்டின் அடிப்படையின்மீது, சிறைச்சாலைகள் திணைக்களம் பிள்ளை சிறைச்சாலையில் தாயுடன் வசித்தல் பிள்ளையின் மிகச்சிறந்த நலன் இல்லை என முடிபுசெய்யுமிடத்து, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் பிள்ளையின் உடல் மற்றும் உள ரீதியிலான பராமரிப்புக்கான திருப்திகரமான ஒழுங்கேற்பாடுகள் செய்யமுடிபுசெய்யுமிடத்து பிள்ளையின் உறவினர்களிள் கவனிப்பில் விடலாம். பிள்ளை உறவினர்களின் கவனிப்பில் விடுதல் பிள்ளையின் மிகச்சிறந்த நலனில்லை என காணப்படின், பிள்ளை நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்திற்கு கையளிக்கப்படுதல் வேண்டும்.*

*(6) சிறைச்சாலைகள் திணைக்களம், சிறைச்சாலையினுள் உணவு, கல்வி, மருத்துவ வசதிகள் மற்றும் தோதான புத்துணர்வு உள்ளடங்கலானவற்றுடன் பெண்கைதிகளுடன் வதிகின்ற பிள்ளைகளின் முறையான உடல், உள மற்றும் சமூக வளர்ச்சிக்காக வசதிகளை உறுதிப்படுத்துதல் வேண்டும்.*

*(7) ஆகக்கூடியளவு நடைமுறையில், சிறைச்சாலை அதிகாரிகள் பிள்ளைகளுக்கான பாதுாப்பான சூழலொன்றை உறுதிப்படுத்துவதற்கு பெண் சிறைச்சாலைகளில் தாய் பிள்ளைக்கான விசேட பிரிவுகளைப் பேணுதல் வேண்டும்*".

(ஆ) விதி 166 இனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன்மூலம்:-

"*166. பிள்ளை ஐந்து வயதை அடையும் போது, பிள்ளை தாயிலிருந்து வேறாக்கப்படுவதற்கான பொருத்தமான நிலையில் பிள்ளை உள்ளார் என மருத்துவ அலுவலரின் சான்றிதழின்மீது தாயிலிருந்து தனிவேறாக்கப்படுதல் வேண்டும். சிறைச்சாலைகள் திணைக்களம் சிறைச்சாலைக்கு வெளியே பிள்ளையின் பராமரிப்புக்காக திருப்திகரமான ஒழுங்கேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். அத்தகைய ஒழுங்கேற்பாடுகள் எவையும் செய்யப்பட்டிருக்கவில்லையாயின், பிள்ளை நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்துக்கு கையளிக்கப்படுதல் வேண்டும்.*"

*(3)* சிறைக்கைதிகளின் தனிவேறாக்கமும் வகுதிப்படுத்தலுக்குமான விதிகள் எனும் தலைப்பின்கீழ் -

(அ) விதி *178* இனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன்மூலம்:-

"*178.* ஆண் கைதிகள் பின்வரும் வகுப்புகளாக பிரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் ஒவ்வொரு வகுப்பும், சிறைச்சாலையின் ஒழுங்கேற்பாடுகள் அனுமதிக்கும் அளவுவரை ஏனைய அனைத்து வகுப்புகளிலிருந்தும் தனிவேறாக வைத்திருக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

(அ) சிவில் கைதிகள்;

(ஆ) விசாரணையை எதிர்பார்த்திருக்கும் கைதிகள் அல்லது முறைப்பாட்டின் முடிவுறாதுள்ள விசாரணை விளக்கமறியலில் அல்லது பிணை தேடுவதில் தவறியுள்ளவர்கள்;

(இ) பதினெட்டு வயதுக்கு கீழான கைதிகள்;

(ஈ) முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட கைதிகள்;

(உ) முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படாத கைதிகள் அத்துடன்;

(ஊ) கைதியின் தண்டனைத் தீர்ப்பு காலப்பகுதிக்கிணங்க அத்துடன்;

(ஆ) விதி *178* இனை உடனடுத்துப்பின்னர் பின்வரும் புதிய விதிகளை உட்புகுத்துவதன்மூலம்:-

"*178அ (1)* ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட மறியற்றண்டனைக்கு தண்டனைத்தீர்ப்பளிக்கப்பட்டவரான ஒவ்வொரு கைதியும், அத்தகைய கைதி அனுமதிக்கப்பட்டதன்பின்னர் ஆகக்கூடியளவு விரைவில் அப்போதிலிருந்து ஆகக்குறைந்தது ஒவ்வொரு பன்னிரெண்டு மாதங்களுக்கொருதடவை அத்தகைய கைதி சிறைச்சாலைக்குள் அல்லது இன்னொரு சிறைச்சாலைக்கு மாற்றப்படுதல் வேண்டுமா என்பதனை தீர்மானிக்கும் பொருட்டு அத்தியட்சகரினால் தலைமைதாங்கப்படுவதுமான கைதி மதிப்பீட்டுக் குழுவொன்றினால் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

*(2)* ஓராம் பந்தியின்கீழ் சிறைக்கைதியொருவரை மதிப்பீடுசெய்யும் பொருட்டு, கைதி மதிப்பீட்டுக்குழு பின்வருவனவற்றை கவனத்திலெடுத்தல் வேண்டும்:-

(அ) கைதியின் வயது மற்றும் பால்;

(ஆ) கைதியின் சமுக, மருத்துவ, உள மற்றும் தொழில்சார் பின்னணி;

(இ) கைதியினுடைய தவறின் தன்மை, அவரால் புரியப்பட்ட தவறினை நோக்கிய அவருடைய பாங்கு மற்றும் தண்டனைத்தீர்ப்பின் கால அளவு;

(ஈ) கைதிக்கு மருத்துவ பரிகரிப்பு அல்லது கல்வி உதவி தேவைப்படுகின்றதா;

(உ) ஏதேனும் குறிப்பிட்ட வகையினதான தொழில்சார் பயிற்சி அல்லது வேலைக்காக கைதியின் பொருத்தமானதன்மை;

(ஊ) சிறைச்சாலையின் கைதியின் நடத்தை;

(எ) கைதியினுடைய குடும்ப உறவுகளை பேணுதல்; அத்துடன்

(ஏ) வேறு ஏதேனும் இயைபான காரணி;

“178ஆ. (1) விதி 178 இன்கீழான கைதிகளின் வகுப்பு தவிர ஒவ்வொரு சிறைச்சாலையின் பாதுகாப்பினை பேணுவதற்காக ஒவ்வொரு கைதியின் இடர்மதிப்பீட்டினை பின்வருவனவற்றைக் கவனத்துட்கொண்டு நடாத்தப்படுதல் வேண்டும்:-

(அ) தனக்கு தானே, ஏனைய கைதிகளுக்கு அல்லது அங்கு வேலைசெய்யும் ஆட்களுக்கு அல்லது சிறைச்சாலைக்கு வருகை தருபவர்களுக்கு ஊறு விளைவித்தல் (இடர் தொடர்பான ஊறு)

(i) கைதியானவர் எந்த தவறுக்கான மறியற்றண்டனை தீர்ப்புக்கு உட்பட்டவராகவுள்ளாரோ அந்த தவறின் பாரதூரமானதன்மை அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தவறுகளுக்கான தண்டனைத் தீர்ப்புக்கு உட்படுகின்ற கைதி ஒருவரின் விடயத்தில் அத்தவறுகளின் எவற்றினதும் பாரதூரமான தன்மை;

(ii) தண்டனைத்தீர்ப்பளிப்பின் காலஎல்லை அல்லது கைதியினால் அனுபவிக்கப்படுகின்ற தண்டனைத் தீர்ப்பளிப்புகள்;

(iii) ஏதேனும் உளக்கோளாறுகளின் வரலாறு, ஏதேனுமிருப்பின்;

(iv) கைதி விசாரணைக்காக காத்திருக்கின்றாரா அல்லது வேறு ஏதேனும் குற்றச்சாட்டுகளுள்ளனவா, அத்துடன் அவ்வாறிருப்பின், அக்குற்றச்சாட்டுகளின் தன்மை.

(ஆ) சிறைச்சாலையின் நல்லொழுங்குக்கான அச்சுறுத்தல் (நல்லொழுங்கு தொடர்பிலான இடர்)

(i) கைதியின் வன்முறையான நடாத்தை பற்றிய வரலாறு;

(ii) (218 ஆம் அத்தியாயமான) நஞ்சுவகைகள், அபின் மற்றும் அபாயகரமான ஔடதங்கள் கட்டளைசச்சட்டத்தின் அட்டவணைகளில் உள்ளடங்கும் ஏதேனும் பதார்த்தம் அல்லது 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, போதையூட்டும் ஔடதங்கள் மற்றும் உளமருட்சியூட்டும் பதார்த்தங்களினதும் சட்டவிரோத வியாபாரத்துக்கு எதிரான சமவாயங்கள் சட்டத்திற்கான மூன்றாம் அட்டவணை மற்றும் நான்காம் அட்டவணையில் உள்ள போதையூட்டும் ஔடதங்கள் மற்றும் உளமருட்சியூட்டும் பதார்த்தங்கள்;

(இ) தப்புவதற்கான சாத்தியம் (பாதுகாப்பு தொடர்பான இடர்)

(i) சிறைச்சாலை கட்டுக்காப்பிலிருந்து தப்புதல் அலல்து தப்புவதற்கு முயற்சித்தமை பற்றிய வரலாறு;

(ii) கவனத்திலெடுக்கப்படவேண்டிய விடயமாக அத்தியட்சகரினால் குறித்துரைக்கப்பட்ட வேறு ஏதேனும் கருமம்;

(ஈ) மறியற்றண்டனை விடுமுறை அல்லது விடுதலையில் இருக்கையில் மீளத்தவறிழைத்தல் (மீளத்தவறிழைத்தல் தொடர்பான இடர்) வேறொரு பாரதூரமான தவறைப் புரிதல்; அத்துடன்

(உ) வெளி உலகத்தில் உள்ள இணையாளர்களுடனான ஒத்துழைப்பில் சமூகத்தில் தவறுகளைப் புரிதல் பற்றி விசாரணை செய்தல் (குற்றம் தொடர்பான இடர்)."

(4) குற்றத்தீர்ப்பளிக்கப்படாத சிறைக்கைதிகள் மற்றும் சிவில் கைதிகள் தொடர்பிலான விதிகள் எனும் தலைப்பின்கீழ்–

(அ) விதி 190 இல், "அக்கட்டளைச்சட்டத்தின் பிரிவு 60 இன்கீழ்" எனும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக பின்வரும் சொற்களையும் எண்ணையும் இடுதல்–

"அக்கட்டளைச்சட்டத்தின் 60 ஆம் பிரிவின்கீழ்:

ஆயின் எவ்வாறாயினும், குற்றத்தீர்ப்பளிக்கப்படாத கைதிகள் அல்லது சிவில் கைதிகள் சிறைக்கு அனுமதிக்கப்பட்ட நேரத்தில் உணவு, உடை, படுக்கை மற்றும் ஏனைய அவசியமானவைகளை அவர்கள் பெறக்கூடியவர்களிடமிருந்து மூன்று ஆட்களை பெயர்குறித்து நியமித்தல் வேண்டும்".

(ஆ) விதி 196 இணை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுக:-

"196. (1) அத்தியட்சகரினால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணக் கொடுப்பனவின்மீது, எவரேனும் சிவில் கைதி, அத்தகைய அறை அல்லது சிறைக்கூடம் கிடைக்குமானதாகவிருப்பின் மற்றும் அத்தகைய கைதியின் நிலை அத்தகைய தங்குமிடத்தின் ஏற்பாட்டினை அனுமதிப்பின், சாதாரண சிறைக்கூடம் அல்லது வாட்டினைவிட நன்கு உபகரணமயப்படுத்தப்பட்ட அறை அல்லது சிறைக்கூடத்தில் பிரத்தியேகமாக தங்குவதற்கு அத்தியட்சகரினால் அனுமதிக்கப்படலாம்,

(2) அத்தியட்சகரின் அனுமதியுடன், (1) ஆம் பந்தியின்கீழ் அறையில் அல்லது சிறைக்கூடத்தில் பிரத்தியேகமாக தங்கவைக்கப்பட்டுள்ளவரான எவரேனும் சிவில் கைதி அத்தியட்சகரின் அனுமதிக்கக்கூடியவாறான அவ்வறைக்கான அல்லது சிறைக்கூடத்திட்கான அத்தகைய தளபாடங்களை அவரது செலவில் கொள்வனவுசெய்யலாம்".

(இ) விதி 200 இணை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுக:-

" 200. (1) இதனகத்துப்பின்னர் ஏற்பாடுகளுக்கமைய, குற்றத்தீர்ப்பளிக்கப்படாத கைதி ஒவ்வொருவரும் அல்லது சிவில் கைதி ஒவ்வொருவரும் அவசியமான ஒழுங்கேற்பாடுகள் சிறைச்சாலையில் செய்யமுடியுமெனின், கிழமைக்கு ஒரு தடவை தமது குடும்பத்தின் நெருங்கிய தரப்பினர், அல்லது பெயரிடப்பட்ட ஒருவர் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆட்களிலிருந்து எண்ணிக்கையில் மூன்றை விஞ்சாதவாறு பதினைந்து நிமிடங்களுக்கு மேற்படாத சந்திப்பொன்றை பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், ஏதேனும் சந்தர்ப்பமொன்றின் விசேட சூழ்நிலையில், அத்தியட்சகர்–

(அ) இவ்விதியின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் எவரேனும் அத்தகைய கைதிக்கு உரித்துடையதான சந்திப்புக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கலாம்;

(ஆ) அத்தகைய எவரேனும்கைதியை சந்திப்பதற்கு அவரின் நெருங்கிய குடும்ப பெயர்குறித்துநியமிக்கப்பட்ட ஆட்களின் அல்லது மூவருக்கு மேற்பட்ட தரப்பினருக்கு வருகைதர அனுமதிக்கலாம்;

(இ) சந்திக்க கிடைக்கும் காலத்தை பதினைந்து நிமிடத்திற்கு மேல் நீடிக்கலாம்.

(2) குற்றத்தீர்ப்பளிக்கப்படாத கைதியொருவர் அல்லது சிவில் கைதியொருவர் ஞாயிற்றுக்கிழமையன்று ஏதேனும் சந்திப்பை பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவராதலாகாது.

(3) எவரேனும் குற்றத்தீர்ப்பளிக்கப்படாத கைதி அல்லது சிவில் கைதியொருவருக்கான ஒவ்வொரு சந்திப்பும் அத்தகைய நேரங்களில் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தியட்சகர் தீர்மானிக்ககூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கமைந்தவராதல் வேண்டும்.

(4) பின்வரும் சூழ்நிலைகளில், அத்தியட்சகர் குறிப்பிட்ட குற்றத்தீர்ப்பளிக்கப்படாத கைதியொருவரை அல்லது சிவில் கைதியொருவரை சந்திப்பதனை மட்டுப்படுத்தலாம், அவை-

(அ) தேசிப் பாதுகாப்பு நலனுக்கானதாகவிருப்பின்;

(ஆ) குற்றமொன்றினை தடுத்தலுக்காக, கண்டுபிடித்தலுக்காக புலனாய்வு செய்வதற்காக அல்லது வழக்குத் தொடுத்தலுக்காக;

(இ) பொது பாதுகாப்பு நலனுக்கானதாகவிருப்பின்;

(ஈ) (35 ஆம் அத்தியாயமான) இளந்தவறாளர்கள் (பயிற்சிப் பாடசாலைகள்) கட்டளைச்சட்டத்தின் பிரிவு 2 இன்கீழ் தாபிக்கப்பட்ட இளந்தவறாளர்களுடைய பயிற்சிப்பாடசாலைகளில் பாதுகாப்பு அல்லது நல்லொழுங்கு மற்றும் ஒழுக்கத்தினைப் பாதுகாப்பதற்கு அல்லது பேணுவதற்கும்;

(உ) சுகாதாரம் அல்லது ஒழுக்கங்களை பாதுகாப்பதற்காக;

(ஊ) ஏனையோரின் கௌரவத்தினைப் பாதுகாப்பதற்காக;

(எ) அதிகாரத்தைப் பேணுவதற்கும் நீதித்துறையின் நடுநிலைமைக்காக;

(ஏ) எவரேனும் ஆளின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை பாதுகாப்பதற்காக;

(ஐ) சூழ்நிலைகள் தேவைப்படுத்தக்கூடியதான வேறு ஏதேனும் காரணத்துக்காக.''; அத்துடன்

(ஈ) விதி 211 இணை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுக:-

"211. ஒவ்வொரு நாளன்றும் பகல் பொழுதில் ஒரு மணித்தியாலத்துக்கு குறையாதவொரு காலப்பகுதியின்போது, குற்றத்தீர்ப்பளிக்கப்படாத கைதி ஒவ்வொருவரும் அல்லது சிவில் கைதி ஒவ்வொருவரும், அப்பியாசம் செய்யும் நோக்கத்துக்காக, அத்தியட்சகரினால் அத்தகைய கைதிக்கு ஒதுக்கப்படக்கூடிய அத்தகைய இடத்திலுள்ள அவருடைய சிறைக்கூடத்துக்கு அல்லது வாட்டிற்கு வெளியே இருக்கலாம்;

ஆயின், எவ்வாறாயினும், ஏதேனும் விடயத்தின் விசேட சூழ்நிலைகளில், அத்தியட்சகர் இவ்விதியில் ஏற்பாடுசெய்யப்பட்டதைவிட நீண்ட காலப்பகுதிக்கு அப்பியாசம் செய்யும் நோக்கத்துக்காக அத்தகைய இடத்தில் உள்ள அவருடைய சிறைக்கூடத்திற்கு அல்லது வாட்டிற்கு வெளியே இருப்பதற்கு அத்தகைய கைதியை அனுமதிக்கலாம்''.

(5) குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட கைதிகளின் தொழில் பற்றியதான விதி எனும் தலைப்பின்கீழ் விதி 221 இனை உடனடுத்துப்பின்னர் பின்வரும் புதிய விதியை உட்புகுத்துவதன்மூலம்:-

" 211அ. (1) இரண்டாம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய, சிறைச்சாலைகள் ஆணையாளர் தலைமையதிபதி, சிறைச்சாலைகள் எனும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சருடன் ஒருப்பாட்டில் பன்னிரெண்டு மாதங்களுக்கு மேற்பட்ட மறியற்றண்டனையின் தண்டனைத்தீர்ப்பை அனுபவிக்கின்றவரும் பொது தனியார் நிறுவனங்களில் அடையாளங்காணப்பட்ட கைத்தெழிற்துறைகளில் சிறைச்சாலை வளாகத்துக்கு வெளியே அவ்வாறு தொழிலுக்கமர்த்தப்படுவதற்கு தொழிலுக்கான தகைமையுடையவரான குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட கைதிகளுக்கு அதிகாரமளிக்கலாம்.

(2) ஆணையாளர் தலைமையதிபதி விதி 178ஆ இல் இடர் மதிப்பீட்டின் அடிப்படையின்மீது சிறைச்சாலை வளாகத்துக்கு வெளியே தொழிலுக்கு தகைமையுடையவரான குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட கைதிகளை அடையாளங்காணலாம்.

(3) சிறைச்சாலைக்கு வெளியே வேலைசெய்கின்ற குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட கைதிகளுக்கு வேலை நேரங்களின்போது உணவு வழங்கப்படுதல் வேண்டுமென்பதுடன் கைத்தொழில்கள் மற்றும் தொழில் தொடர்பிலான ஏலவேயுள்ள சட்டங்களுடன் இசைந்தொழுகும்வகையில் பொது அல்லது தனியார்துறை தொழில்தருநருக்கும் மற்றும் சிறைச்சாலைகள் திணைக்களத்துக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கிணங்க அத்தகைய தொகைகளில் ஊதியமளிக்கப்படுதலும் வேண்டும்.

(4) ஓராம் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட தொழில் மு. ப. 8.00 இலிருந்து பி. ப. 3.30 வரை இருத்தல் வேண்டும்.

(5) ஒவ்வொரு கைதியினால் ஈட்டப்பட்ட ஊதியம் அத்தகைய கைதியினுடைய பெயரில் அரச வங்கியொன்றில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(6) கைதியொருவர் தொழிலின்போது ஏதேனும் விதியை அல்லது பணிப்பை மீறுகின்றவிடத்து, அத்தியட்சகர் அவருடைய தொழிலை முடிவுறுத்தலாம் என்பதுடன் சிறைச்சாலைக்கு மீண்டும் அவரை அழைக்கலாம்.

(7) கைதியினால் புரியப்பட்ட துர்நடத்தையின் பாரதூரத்தன்மையைப் பொறுத்து அத்தியட்சகர் ஒரு வாரத்துக்கு குறையாமல் அத்தகைய கைதியினால் ஈட்டப்பட்ட குறைப்பு நடவடிக்கையை இழப்பிக்கலாம்.

(6) உணவு, உடை மற்றும் படுக்கை பற்றியதான விதிகள் எனும் தலைப்பின்கீழ் விதி 222 இன் (9) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுக:-

" (9) விதி 165 இன்கீழ் சிறைச்சாலைக்கு அனுமதிக்கப்பட்டவரான பிள்ளைகளுக்கு மருத்துவ அலுவலரினால் விதந்துரைக்கப்படக்கூடியவாறானதும் மற்றும் அத்தியட்சகரினால் அங்கீகரிக்கப்பட்டதுமான அத்தகைய திட்ட உணவு வழங்கப்படுதல் வேண்டும்".

(7) "தடைசெய்யப்பட்ட பொருட்கள் பற்றியதான விதிகள்" எனும் தலைப்பின்கீழ் விதிகள் 236, 237 மற்றும் 238 இனை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வருவதனை இடுக:-

" 236. சிறைச்சாலைகள் கட்டளைச்சட்டத்துக்கிணங்கவும் சிறைச்சாலைகள் விதிகளுக்கிணங்கவும் வழங்கப்படாத எல்லாப் பொருட்களும் தடைசெய்யப்பட்ட பொருட்களாகக் கருதப்படுதல் வேண்டும். அத்தியட்சகரின் வலுவளிப்புடனின்றி கைதியொருவரின் உடைமையில் காணப்படுகின்ற அல்லது அத்தகைய ஏதேனும் பொருள்

அல்லது அத்தகைய ஏதேனும் பொருள் எவரேனும் கைதியின் உடைமையில் வருவதற்கென சிறைச்சாலையில் அறிமுகப்படுத்தப்பட்ட அத்தகைய பொருள் அத்தியட்சகரினால் அரச பறிமுதல் செய்யப்படுதல் வேண்டும்.

237. (1) பின்வருபவை மருத்துவ கட்டளையினால்தவிர அல்லது அத்தியட்சகரின் வலுவளிப்பின்கீழன்றி சிறைச்சாலையினால் பொறுப்பேற்கப்படுதலாகாது:-

(i) பணம்;
(ii) ஆடை;
(iii) சமைத்த அல்லது சமைக்காத உணவு;
(iv) குடிபான வகைகள்;
(v) கடிதங்கள்;
(vi) கடதாசி; மற்றும்;
(vii) எண்ணெய்;

(2) பின்வருபவை சிறைச்சாலைக்குள் பொறுப்பேற்றுக்கொள்வது அல்லது சிறைச்சாலைக்கு அறிமுகம் செய்வதற்கு அனுமதி வழங்கப்படுதலாகாது:-

(i) மதுபானம்;

(ii) புகையிலை;

(iii) வெற்றிலை;

(iv) விலங்குகள்;

(v) அனுமதியளிக்கப்படாத நூல்கள்;

(vi) அட்டைகள், தாயக்கட்டை அல்லது சூதாட்டத்துக்கு பயன்படுத்தப்படும் எந்தவொரு உபகரணமும்;

(vii) கருவிகள்;

(viii) வெடிபொருள், வெடிக்கக்கூடிய கருவிகள் அல்லது தீ வைக்கும் கருவிகள்;

(ix) வெடிப்பொருள் அல்லது தீவைக்கும் கருவியொன்றை உற்பத்திசெய்ய பயன்படுத்தக்கூடிய ஏதேனும் பதார்த்தம் அல்லது உபாயமுறை;

(x) வெடிமருந்துகள்;

(xi) ஏதேனும் பிஸ்ரல், ரிவோல்வர், ரைபல், தன்னியக்க துப்பாக்கி, குறுந்தூர துப்பாக்கி அல்லது வேறு ஏதேனும் வகையிலான துப்பாக்கி;

(xii) ஆயுதங்கள்;

(xiii) எவரேனும் ஆளொருவருக்கு எந்த வகையிலுமான உடல் காயம் அல்லது ஊறு ஏற்படுத்தும் பாதகமான செயலை மேற்கொள்ள அல்லது சிறைச்சாலையிலிருந்து தப்பியோடுவதற்கு

சிறைக்கைதியொருவருக்கு உதவுவதற்காக தயார் செய்யப்பட்ட அல்லது பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்ற அல்லது வடிவமைத்தல் அல்லது நவீனமயப்படுத்தப்பட்டுள்ள அல்லது வடிவமைக்க அல்லது நவீனமயப்படுத்தக்கூடிய ஏதேனுமொரு உபாயமுறை அல்லது உபகரணம்;

(xiv) கையடக்கத் தொலைபேசி, தொலைபேசி அழைப்பை பெற்றுக்கொள்ள அல்லது பெறுவதற்கு பயன்படுத்தக்கூடிய கையடக்கத் தொலைபேசி உபகரணங்கள் அல்லது வேறு உபாயமுறை அல்லது கையடக்கத் தொலைபேசி சார்ஜர்;

(xv) சந்தாக்காரர் அடையாளப்படுத்தும் தொகுதிகள் சிம் அட்டைகள்;

(xvi) மருத்துவ அலுவலரின் முன்னங்கீகாரமின்றி பட்டியலிடப்பட்ட மருந்துகள் போன்ற பதார்த்தமொன்று;

(xvii) (218 ஆம் அத்தியாயமான) நச்சு வகைகள், அபின் மற்றும் அபாயகரமான ஔடதங்கள் கட்டளைச்சட்டத்தின் அட்டவணையில் உள்ளடங்கும் பதார்த்தமொன்று; சிறிஞ்சர் அல்லது ஊசியின் வடிவிலான கூரிய முனை; பொன்ங் (bong) என அறியப்படும் உபாயமுறை உட்பட புகை அல்லது புகை வழியாக உள்ளே ஈர்ப்பதன்மூலம் பதார்த்தமொன்றை உட்புகுத்துவதற்கு பயன்படுத்தக்கூடிய உபாயமுறை; (ஔடதம் அல்லது பதார்த்தமொன்றை சூடேற்றுவதற்கு அல்லது எரியூட்டுவதன் விளைவாக);

(xviii) 2008 இன் 1 ஆம் இலக்க, போதையூட்டும் ஔடதங்கள் மற்றும் உளமருட்சியூட்டும் பதார்த்தங்களினதும் சட்டவிரோத வியாபாரத்துக்கு எதிரான சமவாயங்கள் சட்டத்துக்கான மூன்றாம் அட்டவணை மற்றும் நான்காம் அட்டவணையில் உள்ள போதைவஸ்து அல்லது உளமருட்சியூட்டும் பதார்த்தம்;

(xix) சிறைச்சாலையின் பாதுகாப்புக்கு மற்றும் பாதுகாப்பான தன்மைக்கு ஏதேனும் அச்சுறுத்தல் ஏற்படுத்துவதாக தீர்மானிக்கப்பட்ட தீப்பிடிக்கத்தக்க, அரிக்கும் அல்லது நச்சுப்பதார்த்தம்;

(xx) வர்ணப்பூச்சு;

(xxi) அஸிட் அல்லது சாறு;

(xxii) கம் அல்லது வேறு பசை;

(xxiii) களைக்கொல்லி, பூஞ்சைக்கொல்லி அல்லது கிருமிநாசினிகள்;

(xxiv) அழுத்தத்தை பிரயோகிக்கும் தெளிக்கும் கெனிஸ்ரர்;

(xxv) வீடியோ விளையாட்டுக்கள்; கணினி விளையாட்டுக்கள் அல்லது திரைப்படங்கள்;

(xxvi) ஆபாச வெளியீடுகள் மற்றும் பதார்த்தங்கள்;

(xxvii) விம்பங்களை இலகுவாக்கிக் கொள்ள அல்லது ஒளிப்பதிவு செய்துகொள்ளும் ஆற்றலைக் கொண்ட கமரா அல்லது வேறு உபாயமுறை; (டிஜிரல் அல்லது சினிமாசுருள் அல்லது ஒலிச்சுருள்);

(xxviii) 2 வழிமுறை வானொலி ( walkie - talkie என்றழைக்கப்படுகின்ற,)

(xxix) விமானி அற்ற தூரத்திலிருந்து இயக்கும் விமானம்;

(xxx) கணினி வலையமைப்புக்களுக்கு அல்லது வலையமைப்புக்களின் தரவுப் பரிமாற்றத்திற்கு அல்லது பெற்றுக்கொள்ளக்கூடியதான முறையியல் அல்லது வேறு உபாயமுறையை உள்ளடக்கிய ஏதேனும் உபாயமுறையும்;

(xxxi) ஏதேனும் தரவுக் களஞ்சியப்படுத்தல் உபகரணம்;

(xxxii) ஏதேனும் வேறு டிஜிரல், இலத்திரனியல் அல்லது மின் உபகரணம் அல்லது உபகரணம்; மற்றும்;

(xxxiii) மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயத்தை தயார் செய்யும் முறை அல்லது சிறைச்சாலையிலிருந்து தப்பியோடும் முறை அல்லது சிறைச்சாலையில் கிளர்ச்சி செய்தல், கிளர்ச்சி அல்லது அறிவுரை வழங்குவதற்கு, கற்பிப்பதற்கு அல்லது வழிகாட்டுவதற்கு வழிவகுக்கும் யாதாயினும் வரைபடம், திட்டம் அல்லது வேறு ஆவணமொன்று அல்லது கற்புல, செவிப்புல ஒளிப்பதிவு அல்லது வேறு வகையிலான யாதாயினுமொரு பதார்த்தம்".

EOG 07 - 0064

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.